சுற்றிக்கை இல. 1995/02

எனது இல. 3/ எஸ்டீ/3/ 5/ 95,
கல்வி உயர்கல்வி அமைச்சு,
"இசுருபாய",
பத்தரமுல்ல.
02 ஜனவரி 1995

சகல பாடசாலை அதிபர்களுக்கும்,

பாடசாலை அபிவிருத்திச்சபைகள் - நீக்கஞ்செய்தல்

1992 பெப்ரவரி 12 ஆந்திகதி 701/12 இலக்கங்கொண்ட அரசாங்கவர்த்த மானி (அதிவிசேடம்) மூலம் மேன்மைதங்கிய ஜனதிபதி, கல்வி, உயர்கல்வி அமைச்சர் என்பவரால் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த பாடசாலை அபிவிருத்திச்சபைகள் 1995 ஜனவரி 02 ஆந்திகதியிலிருந்து சகல பாடசாலைகளிலும் நீக்கம் செய்யப்பட்டுள்ளன. பாடசாலை அபிவிருத்திச்சபைகள் ஆரம்பமாவதற்கு முன்னர் இயங்கி வந்த பாடசாலை அபிவிருத்திசங்கங்கள், தேவையான மாற்றங்களுடன் பாடசாலை அபிவிருத்திச்சபைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள கருமங்களை ஆற்றும்.

02. 1993 செப்தம்பர் 29 ஆந்திகதியிடப்பட்ட எனது சுற்றுநிருப இலக்கம் 19/1993 ஐயும் தொடரிலக்கம் 3/ எஸ்டீ/ 3/ 5/ 93 ஐயும் கொண்ட சுற்றுநிருபம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

03. 19/1993 ஆம் இலக்கச் சுற்றுநிருபத்தின் 09 : 01 ஆம்பிரிவிற்கு அமையப் பாடசாலை அபிவிருத்திச்சபைகளிலுள்ள நிதியைப் பாடசாலை அபிவிருத்திச்சங்கங்களுக்கு மாற்றுதல் வேண்டும். 1995 ஜனவரி 02 ஆந்திகதியிலிருந்து வசதிகள் சேவைகள் கட்டணமாகச் சேகரிக்கப்பட்ட நிதியைப் பாடசாலை அபிவிருத்திச்சபைகள் அமைக்கப் படுவதற்கு முன்பு இருந்தவாறு வசதிகள் சேவைகள் கணக்கில் வைப்புச் செய்தல் வேண்டும்.

04. பாடசாலை அபிவிருத்திச்சங்கள் கணக்குகள் 1982.03.30 ஆந்திகதியும் 1982 / 2 இலக்கங்கொண்ட பாடசாலை அபிவிருத்திச்சங்கச் சுற்றுநிருபத்துக்கு அமையவும் திருத்தஞ் செய்யப்பட்ட 1992 - 10 - 15 ந்திகதியும் 2/ எஸ்டீ/ 3/ 8/ 6/ 91 இலக்கங்கொண்ட சுற்றுநிருபத்துக்கு அமையவும் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும். பாடசாலை அபிவிருத்திச்சங்கங்களுக்குரிய சுற்று நிருபங்களுக்கு மேலும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனக்கருதப்படுமிடத்து அத்திருத்தங்கள் என்னால் காலக்கிரமத்தில் மேற்கொள்ளப்படும்.

05. பாடசாலை அபிவிருத்திச் சபைகள் கலைக்கப்படும் போது அவை அரச அல்லது மாகாண அதிகாரிகளுடன், கைச்சாத்திட்ட ஒப்பந்தங்களைச் செய்வதற்கு வழங்கப்பட்ட விசேட சலுகையின் கீழ், பாடசாலை அபிவிருத்திச்சபைகளுக்குள்ள பத்துலட்சம் ( ஒருமில்லியன் ) ரூபாவரையில் ஏதாவது கட்டடநிர்மாண வேலையில் ஈடுபட்டிருப்பின், அந்நடவடிக்கைகளை அவ்வப்பாடசாலைகளின் பாடசாலை

அபிவிருத்திச் சங்கங்கள் வாயிலாக நிறைவேற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. அவ்வாறாயினும் 1995 ஜனவரி 02 ஆந் திகதியிலிருந்து வழக்கத்திலுள்ளவாறு சகல ஒப்பந்தங்களுக்கும் கேள்வி அறிவித்தல் (ரெண்டர்) முறை பின்பற்றப்பட வேண்டும்.

06. இச்சுற்று நிருபத்தை நடைமுறைப்படுத்துகையில் ஏழும் பிரச்சினைகள் தொடர்பாக விளக்கம் தேவைப்பட்டால் கல்வி, உயர்கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் திரு பீ. ஜீ. தயாரத்ன அவர்களுடன் தொடர்பு கொள்ளவும். அவர்களின் தொலைபேசி இலக்கம் 864863 ஆகும். பக்ஸ் (FAX) இலக்கம் 865132 ஆகும்.

பீ. ஜீ. தயாரத்ன,
மேலதிகச் செயலாளர்
(கல்வி அபிவிருத்தி)

ஒ / இ. எம். டீ. டீ. பீரிஸ்
செயலாளர்,
கல்வி, உயர்கல்வி அமைச்சு,

பிரதிகள் :
01. மாகாணக்கல்விச் செயலாளர்கள்
02. மாகாணக்கல்விப் பணிப்பாளர்கள்
03. வலயக்கல்விப் பணிப்பாளர்கள்.
04. கோட்டத்துக்குப் பொறுப்பான பி. க. பணிப்பாளர்கள்
05. கணக்காளர் நாயகம்
06. பணிப்பாளர் நாயகம், தேசியக்கல்வி ஆணைக்குழு
07. பரீட்சைத்திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம்
08. ஆணையாளர், கல்வி வெளியீடுகள்
09. கல்வி, உயர்கல்வி அமைச்சின் சகல பதவி நிலை அதிகாரிகளுக்கும்
10. தலைவர், தேசிய ஆணைக்குழு